பொருளாதார சிந்தனை வரலாறு

History of Economic Thought

III BA Economics

18K5EC12

பொருளடக்கம்

- பொருளாதார சிந்தனை வரலாறு விளக்கம்
- பொருளாதார சிந்தனை வரலாற்றின் முக்கியத்துவம்
- வணிகவாதம் வளர்வதற்கான காரணங்கள்
- இயற்கைவாதம் தோன்ற காரணங்கள்
- ஆடம்ஸ்மித்தின் நாடுகளின் செல்வம் கோட்பாடுகள் விளக்கம்
- மால்தசின் மக்கள் தொகை கோட்பாட்டின் முக்கியத்துவம்
- டேவிட் ரிக்கார்டோவின் வார கோட்பாடு திறனாய்வு
- “சேயின்” அங்காடி விதி - விளக்கம்
- J.S.மில் பொருளாதார விளக்கம் உயர
- செயின்ட் சைமன் பொருளாதார கருத்துக்கள்

<u>வழிகாட்டும் நூல்கள்</u>

**முனைவர் மா.பா. குருசாமி**

**முனைவர் கோ. சடகோபன்**

**முனைவர் வே. கலியமூர்த்தி**

# 1. பொருளாதாரச் சிந்தனை வரலாற்றின் இயல்பும் முக்கியத்துவமும்
## (NATURE AND SIGNIFICANCE OF THE HISTORY OF ECONOMIC THOUGHT)

"அருளில்லார்க்கும் அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு",

என்று வான்புகழ் வள்ளுவர் கூறுகின்றார். உலகில் வாழப் பொருள் இன்றியமையாத தேவையாகின்றது. ஆதலால், மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே பொருள் தேடும் முயற்சியும், சிந்திக்கத் தொடங்கிய நேரத்திலிருந்தே பொருளைப் பற்றிய சிந்தனையும் தொடர்கின்றது.

**தோற்றமும் வளர்ச்சியும்:** மனித சமுதாயத்தின் வாழ்வியலைப் பற்றி எண்ணிய சிந்தனையாளர்கள் எல்லாம் வாழ்க்கையின் ஒரு கூறாகப் பொருளியலையும் எண்ணிப்பார்த்தனர். கிறித்தவர்களின் விவிலியம், பிளாட்டோவின் 'குடியரசு', அரிஸ்டாடிலின் படைப்புகள், திருவள்ளுவரின் திருக்குறள், கௌடில்யரின் 'அர்த்த சாஸ்த்திரம்' போன்ற தொன்மையான நூற்களில் எல்லாம் சமயக் கருத்துக்களோடும், அரசியல் கருத்துக்களோடும், சமுதாயக் கருத்துக்களோடும் சேர்ந்து பொருளியல் கருத்துக்களும் காணப்படுகின்றன. ஆனால் பொருளியல் இருந்தாலும் சிந்தனை தனித்து மேலோங்கி நிற்கவில்லை. 15-ம் நூற்றாண்டில் வாணிபம் பெருக, பொருமளின் முக்கியத்துவத்தை உலகம் உணரத்தொடங்கியது. ஆதலால் பொருளைப் பற்றிய சிந்தனை வலுப்பெற்றது. இருந்தாலும் பொருளாதாரச் சிந் தனை முறையாக, அறிவியல் அடிப்படையில் அமையவில்லை.

1776இல் 'பொருளியலின் தந்தையாகக்' கருதப்பெறுகின்ற 'ஆடம் ஸ்மித்' (Adam Smith) எழுதிய "நாடுகளின் செல்வம்" [Wealth of Nations] என்னும் நூல் வெளிவந்தது. ஆடம்ஸ்மித் பொருளியல் சிந்தனைக்கு அறிவியல் அடிப்படையில் ஓர் உருவம் அமைத்தளித்தார். இதனையே பொருளியல் சிந்தனை வரலாற்றின் தொடக்கமாகக் கருதலாம். கடந்த இருநூறு ஆண்டுகளில் பல பொருளாதாரச் சிந்தனையாளர்கள் பொருளியலை வளப்படுத்தியுள்ளனர். ஆதலால் பொருளாதாரச் சிந்தனை விரைந்து வளர்ந்துள்ளது.

பொருளாதாரச் சிந்தனை வரலாறு, பொருளாதார வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையதென்றாலும், பொருளாதார வரலாற்

றிலிருந்து வேறுபட்டு, தனித்து நிற்கும் இயலாகும். பொருளாதார வரலாற்றில் [Economic History] கடந்த காலத்தில் ஏற்பட்ட தொழில் வாணிப வளர்ச்சியையும், வளத்தையும், பொருளாதாரச் சிக்கல்களையும் பயில்கின்றோம். ஆனால் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் [History of Economic Thought]பொருளாதாரக் கருத்துக்களின் தோற்றத்தையும், அவை வளர்ச்சி பெற்ற முறையையும், காலச் சூழ்நிலையையும், அக்கருத்துக்களின் தொடர்புகளையும் ஆராய்கின்றோம்.

**விளக்கம்:** பொருளாதாரச் சிந்தனை வரலாறு பொருளாதாரக் கருத்துக்களின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் விளக்குகின்றது. பொருளாதாரச் சிந்தனையின் தாக்கம் மனிதனின் நடவடிக்கைகளிலும், நிறுவன அமைப்பு முறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது.

பேராசிரியர் ஹானே [Haney], பொருளாதாரச் சிந்தனை வரலாற்றை, "பொருளியல் கருத்துக்களின் வளர்ச்சி, அவற்றின் மூலம் பற்றிய தேடல், அவற்றின் உள்ளார்ந்த தொடர்புகள், வெளிப்பாடுகள் பற்றிய திறனாய்வுத் தொகுப்பு", என்று கூறுகின்றார்.

ஜே.எப்.பெல். [J.F.Bell], "பொருளியல் பற்றி எழுதிய சிந்தனையாளர்கள் விட்டுச் சென்றமரபுரிமை பற்றிப் படித்தல் பொருளாதாரச் சிந்தனை வரலாறு ஆகும்", என்று கூறுகின்றார்.

பொருளாதாரச் சிந்தனை வரலாறு பரந்து விரிந்த பாடமாகும். கடந்த காலத்தில் பல்வேறு நாடுகளிலும் தோன்றிய பொருளாதாரச் சிந்தனைகளையும் அவற்றின் தாக்கத்தையும், அவற்றின் மாறுபட்ட போக்குகளையும் முறைப்படுத்தி ஆராய்கின்றோம்.

**பொருளாதாரச் சிந்தனை வரலாற்றின் ஆய்வு முறைகள்:** பொருளாதாரச் சிந்தனை வரலாற்றை ஆய்பவர்கள் பல்வேறு அணுகு முறைகளைப் பின்பற்றுகின்றனர். அவற்றைத் தொகுத்துக் கூறலாம்:

**1. கால அடிப்படை ஆய்வு முறை [Chronological Approach]** : இம்முறையில் பொருளாதாரச் சிந்தனைகளை அவற்றை வழங்கிய அறிஞர்கள் வாழ்ந்த காலத்தின் அடிப்படையில் ஆராய்கின்றனர். இதன் சிறப்பு முதலில் தோன்றிய பொருளியலறிஞர்களின் கருத்தை முதலிலும், மற்றவர்களின் கருத்துக்களைத் தொடர்ச்சியாகவும் அறிய முடிவ திலும், அவை தோன்றிய காலச் சூழ்நிலையில் அவற்றைப்புரிந்து கொள்ள இயல்வதிலும் இருக்கின்றது. பெல்பெர் கூசன், டெய்லர்,ஹானே போன்றவர்கள் இந்த அணுகுமுறையைப்

ன்பற்றினர். இவர்கள் பொருளியல் சிந்தனையை அ) தொன்மைக் காலச் சிந்தனை. இவர்கள் பொருளியல் சிந்தனையை (அ) தொன்மைக் காலச் சிந்தனை; ஆ) இடைக்காலச் சிந்தனை, இ) தற்காலச் சிந்தனை என்று பகுத் தாய்கின்றனர்.

**2. தத்துவ ஆய்வுமுறை** [Philosophical Approach]: பழங்காலத்தில் அறிவியலோடு தொடர்புடையதாகப் பொருளியலைக் கருதியதால், தத்துவநோக்கில் பொருளியல் கருத்துக்களை விவாதிக்கின்ற, ஆராய்கின்ற போக்கு இருந்தது. பொருளியலை தத்துவ நோக்கில் ஆராய்ந்தவர்களாக இம்முறையை முதலில் பின்பற்றிய கிரேக்க தத்துவ ஞானியான பிளாட்டோவையும், அரிஸ்டாடில், ஆடம்ஸ்மித், மார்க்ஸ் போன்றவர்களையும், கூறலாம்.

**5. கருத்தியல் ஆணுகுமுறை** : [Conceptual Approach]: இந்த ஆய்வு முறையில் வட்டி, வாரம், கூலி, ஆதாயம், இறுதி நிலைப்பயன்பாடு போன்ற கருத்துக்கள் [Concepts] எப்படித் தோன்றி வளர்ச்சி பெற்றதென்பதை ஆராய்கின்றனர். இதில் சிந்தனையாளர்களை விடக் கருத்துக்கே முக்கியத்துவம் தருகின்றனர்.

**4. தொன்மைப் பகுத்தாய்வு முறை**: [Classical Deduction Approach]: தொன்மைப் பொருளியல் பள்ளியைச் சார்ந்த சிந்தனையாளர்களான ரிக்கார்டோ, மால்தஸ், ஜே.எஸ்.மில் போன்றவர்கள் "பகுத்தாய்வுமுறையைப்" [Deductive Method] பின்பற்றி கருத்துக்களைக் கூறினர். இவர்கள் பின்பற்றிய ஆய்வுக்கு இம்முறை துணை செய்கின்றது.

**5. வரலாற்று ஆய்வுமுறை**: [Historical Approach]: கடந்தகால மனித வாழ்க்கை முறையின்- வரலாற்றின்-அடிப்படையில் பொருளியல் கருத்தக்களை உருவாக்குகின்ற முறை ஜெர்மனியில் தோன்றியது இவர்கள் 'தொகுத்தாய்வு முறையைப்' [Inductive Method] பின் பற்றினார்கள்.

**6. புதிய-தொன்மை ஆய்வு முறை**: [Neo - Classical Approach]: தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத் துக்களை தற்காலப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் புத்தாக்கம் செய்து கொடுத்த சிந்தனையாளர்களை புதிய - தொன்மை ஆய்வு முறையாளர்களாகக் கருதுகின்றோம். இதற்கு மார்ஷல் [Marshall] ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இம்முறையில் பகுத்தாய்வையும் தொகுத்தாய்தலையும் கையாள்கின்றனர்.

**7. நல ஆய்வுமுறை** : [Welfare Approach]: சமுதாய

தவிர்க்க இயலும். ஆதலால் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றைக் கற்பதால் கிடைக்கும் நன்மைகளைத் தொகுத்துக் கூறலாம்.

**1. சிந்தனை தொடர்ச்சியை அறிய:** பொருளியல் சிந்தனை இன்றுவளர்ச்சி பெற்ற நிலையில் காணப்பட்ட போதிலும், அதிலுள்ள கருத்துக்கள் முற்றிலும் புதுமையானவையல்ல என்பதை அறியப் பொருளாதாரச் சிந்தனை வரலாறு துணைசெய்கின்றது. பொருளியல் சிந்தனைகளில் ஒரு தொடர்ச்சியும், ஒருமைப்பாடும் இருக்கின்றன. கருத்துக்களின் ஊடுசரடாக இருக்கும். சிந்தனைப் போக்கை அறிய பொருளியல் சிந்தனை வரலாற்றைத் தெரிந்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, கீன்சின் புரட்சிகரமான சிந்தனைக் கருத்துக்களில் கூட சில பழங்கருத்துக்களின் சாரமும் தாக்கமும் இருப்பதைக் காணலாம். கருத்துக்களின் பழமையை அறிய வரலாற்றைப் பயில்தல் தேவை.

**2. எக்காலத்திலும் கருத்துக்கள் தோன்றுதல் :** பொருளியல் கருத்துக்கள் தோன்றாமல் எக்காலத்திலும் இருந்ததில்லை. சிலர், இடைக்காலத்தை "இருண்ட காலமாகக்" கருதி அக்காலத்தில் உருப்படியான பொருளியல் கருத்துக்கள் தோன்ற வில்லை என்று எண்ணுகின்றனர். உண்மையில், அக்காலத்தில் கிரேக்க சிந்தனையாளர்கள் பணம், வட்டி, பொதுவுடைமை குறித்து சிந்திய கருத்து உரங்கள், பிற்காலச்சிந்தனைக்கு வளம் சேர்த்தன இதனைப் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றின் மூலம் தான் அறிகின்றோம் .

**3. பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க :** பொருளாதாரக் கொள்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. பொருளாதாரக் கொள்கையை இடம், காலம், சூழ்நிலையை ஒட்டி உருவாக்குகின்றோம். இதற்குப் பொருளியல் கருத்துக்கள் துணை நிற்கின்றன. கடந்த காலத்தில் பொருளாதாரக் கொள்கைகளை எப்படி உருவாக்கிச் செயல்படுத்தினர். அவற்றின் நிறை குறைகள் யாவை என்பதை அறிந்துகொள்வது புதிய பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கத் துணை செய்யும்.

**4. பிற இயல்களோடு இருக்கும் தொடர்பினை அறிய:** பொருளியல் தற்காலத்தில் தனி இயலாக வளர்ச்சி பெற்ற போதிலும், அதற்கும் பிறசமுதாய இயல்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஒருகாலத்தில் அரசியலோடு தொடர்பு படுத்திப் பொருளியலை வளர்த்தனர். உலகில் தோன்றிய அறநெறியாளர்கள் வாழ்வியலோடு தொடர்புடைய பொருளியல் கருத்துக்களைக் கூறி யுள்ளனர். சமய எழுச்சிகளும் , சமுதாயப் புரட்சிகளும், அரசியல் மாற்றங்களும்

கையாண்டனர். ஆடம்ஸ்மித் அவரது "நாடுகளின் செல்வம்" என்னும் நூலில் வணிக வாதத்தைக் கடுமையாகச் சாடினார். இதன் முதல் இச்சொல் தனிச்செல்வாக்குப் பெற்றுப் பரவியது. வணிகவாதக் கொள் கைகளும் வழிமுறைகளும் நாட்டிற்கு நாடு வேறுபட்டதைப் போன்று அதனைக் குறிக்கப் பயன்படுத்திய சொல்லும் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையாக அமைந்தது. பிரான்சில் இதனை உருவாக்கிய கால்பெர்ட் (Collpert)என்பவரின் பெயரால் 'கால் பர்ட்டிசம்' என்று அழைத்தனர். ஜெர்மனியிலும், ஆஸ்திரியாவிலும் 'காமரலிசம்' (Kameralism) என்று குறிப்பிட்டனர். ஆடம்ஸ்மித் இதற்கு 'வாணிப இயல்முறை' (Mercantile System) என்று பெயரிட்டார். இக்கோட் பாட்டினர் பொன், வெள்ளியின் இருப்பைக் கூட்டும் வழிமுறைகளை வழியுறுத்தியதால் இதற்கு 'பொன் வெள்ளிக்கோட்பாடு (Bullionsm) என்ற பெயரும் வந்தது.

## I. வணிக வாதச் சிந்தனை வளர்ந்ததற்கான காரணங்கள்

வணிகவாதத் தத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கு, அது தோன் றியக் காலச் சூழ்நிலையையும், வரலாற்றுப் பின் புலத்தையும், அது வளரத் துணைசெய்த காரணிகளையும் அறிந்து கொள்வது தேவையாகும்.

**1. பொருளாதாரக் காரணிகள்:** பதினைந்தாம் நூற் றாண்டின் இறுதியில், ஐரோப்பிய நாடுகளில் பொருளாதாரத் துறையில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. வட்டாரத் தன்னிறைவைக் கொண்டி ருந்த பொருளாதாரம் மாறி அங்காடிப் பொருளாதாரம் தோன்றியது. வேளாண்மையின் செல்வாக்குக் குறைய செய்பொருட்கள் முதன்மை பெற்றன. வாணிபம் விரைந்து வளர்ந்தது. 'திரைகடலோடியும் திரவியம் தேட' முயன்றவர்கள் பன்னாட்டு வாணிபத்தை விரிவடையச் செய்தனர். நிலப் பிரபுத்துவ முறை ஆட்டம் கண்டது. அங்காடித் தேவைக்கேற்ப உற்பத்தி முறையை மாற்றும் பணியைப் பணம் செய்தது. உற்பத்தி முறை மாற்றத்தால் தொழிலாளர் இனம் தோன்றி யது. தொழில் துறையில் போட்டி தலை தூக்கியது.

பணம் பொன்னாகவும் வெள்ளியாவும் இருந்தது. பொன் னையும் வெள்ளியையும் பெருமளவில் கண்டு பிடித்து பணமாகப் பயன்படுத்தியதால் பொருளாதாரத்தில் பல அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன. பணப்புழக்க மிகுதியால் பண வீக்கம் தோன்றியது. இதனால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அரசின் பணத் தேவை கூடியது. அரசு வரிகள் மூலம் பொது வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுத்தது. வாணிபமும் தொழிலும் அரசுக்கு வருவாய்

தரும் துறைகளாக அமைந்தன. வாணிப, தொழில்வளர்ச்சி பணத்தின் முக்கியத்துவத்தைக் கூட்ட, வங்கி முறை தோன்றி வளர்ந்தது. போக்குவரத்து, வேளாண்மை வளர்ச்சியும், மக்கள் தொகைப் பெருக்கமும் வணிகவியலாரின் கருத்துக்களுக்கு ஆக்கம் தந்தன. வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் செல்வத்தைக் குவித்தால் தான் நாடு முன்னேறும் என்ற கருத்துக்கு மக்களிடம் ஆதரவு பெருகியது.

**2. அரசியல் காரணிகள்:** வணிக வாதத்திற்கு ஊக்கம் தரும்வகையில் அரசியல் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டது. நிலப் பிரபுத்துவத்தின் செல்வாக்குக் குறைந்தது; தேசியம் மலர்ந்தது. மன்னர்கள் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்ட வலுவான தேசிய அரசை உருவாக்க முயன்றனர். இதனால் வட்டாரப் பொருளாதார அமைப்புக்களுக்கும் மைய அரசுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்நிலையில் வணிகவியலாளர்கள், அரசையும், வலுவான மைய அரசையும் ஆதரித்தனர். இக்கருத்தை வலியுறுத்தியவர்களில் இருவர் குறிப்பிடத்தக்கவர். மேக்கியவல்லி அவரது புகழ்பெற்ற 'அரசன்' (**The Prince**) என்னும் நூலில் எப்படி மன்னன் அறநெறிகளைப்பற்றிக் கவலைப்படாது வலுவான அரசை உருவாக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைக் கூறி, வழிமுறைகளையும் விளக்கினார். ஜீன் போடின் அவரது நூலில் இறைமைக் கருத்தை வலியுறுத்தி பொருளாதார மேம்பாட்டின் மூலமே மன்னனின் ஆட்சி வலுவாக இருக்குமென்ற கருத்தை உரைத்தார். வணிகவியலாரின் கருத்துக்கள் தேசிய அரசுகள் (National States) உருவாகத்துணை செய்தன. ஜெர்மன் அறிஞர் ஸ்மாலர் (Schmoller), "வல்லரசை உண்டாக்கும் வழிமுறைகளைக் கற்பிக்கும் அரசியல் கோட்பாட்டைப் பொருளாதார துறையில் நிறை வேற்று வதே வணிகவாதமாகும்," என்று கூறுவது கவனிக்கத்தக்கது.

**3. சமயக் காரணிகள்:** மக்களின் சமயக் கண்ணோட்டத்தில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. மார்ட்டின்லூதர் [**Martin Luther**] போப்பாண்டவருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார். இதனால் ரோமன் கத்தோலிக்கரின் தலைவரானபோப் அரசியலில் தலையிடுவதற்கு எதிர்ப்புத் தோன்றியது. மார்ட்டின் லூதர் உருவாக்கிய புதிய கிறிஸ்த்தவ சமயம் [**Protestantism**] பணம் தேடுவது பாவமல்லவென்றகருத்தை வலியுறுத்தியது. தனிமனித சுதந்திரம் ஏற்றுக் கொள்ளப்பெற்றது. இதனால் மக்கள் வாணிபத்தின் மூலமும் தொழில்களின் மூலமும் பணம் தேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். போப்பாண்டவரின் பிடியிலிருந்து விடுபட்டமன்னர்கள் நேரடியாக வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டும், வரி விதிப்பது

போன்ற முறைகளினாலும் தங்களது வருவாயைப் பெருக்க முயன்றனர். இந்தச் சமயச்சூழல் வணிக வாதக்கருத்து வளரத் துணை செய்தது.

**4. கலாச்சார மாற்றங்கள்:** 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் பெரிய கலை, இலக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. மத்திய காலக் கருத்துப்படி மக்கள் வறுமை நிலையில் வாழ்வதே உயர்வான வாழ்க்கை என்ற சமய நம்பிக்கை இருந்தது. ஆனால் பழங்காலக் கலை இலக்கியம், கிரேக்க – ரோமானிய நாகரிகம் ஆகியவற்றின் மறு மலர்ச்சியும், புதிய இலக்கியங்களும் மக்களின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தைப் பெரிதும் மாற்றின. மக்கள் வானுலக வாழ்வை விட மண்ணுலக வாழ்க்கையைப் பெரிதும் மதிக்கத் தொடங்கினர். இதனால் பணம் தேடி ஆடம்பரமாக வாழும் முயற்சியை மேற்கொண்டனர். பணம் மக்களிடம் தனியாட்சி செய்ய, வாணிப வாதம் மக்களின் வாழ்க்கை முறையாக மாறியது.

**5. அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி :** அறிவியல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவாகப் பல மாற்றங்கள் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக, மேரினரின் திசைக் காட்டும் கருவியைக் [Mariner's Compass] கண்டுபிடித்ததால் கடல் போக்குவரத்து வளர்ந்தது. இதனால் கடல் வாணிபம் பெருகியது. கடிகாரம், உருப்பெருக்கி, தொலைநோக்கி, காற்றழுத்தமானி போன்றவற்றைக் கண்டுபிடித்ததால் மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்தன. புதிய கண்டுபிடிப்புக்கள் வணிகவியலாரின் பொன்னைக்குவிக்கும் வாணிபவளர்ச்சிக்கு உற்ற துணையாக இருந்தன.

**6. புதிய நாடுகளின் கண்டுபிடிப்பு:** 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் துணிச்சல் மிக்கவர்கள் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். 1492 இல் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். ஸ்பானியர்கள் மெக்சிக்கோவையும், பெருவையும் கைப்பற்றி, அங்கிருந்த சுரங்கங்களில் எடுக்கப்பட்ட தங்கத்தையும், வெள்ளியையும் தங்களது நாடுகளுக்குக் கொண்டு வந்தனர். இதன் மூலம் ஸ்பெயின் நாட்டின் வலிமை ஓங்கியதால், வணிகவியலாரின் கருத்துக்கள் சிறந்தவை என்ற உறுதி ஏற்பட்டது. 1498 இல் வாஸ்கோடகாமா இந்தியாவிற்குப் புதிய வழியைக் கண்டுபிடித்ததால் போர்ச்சுக்கல் நாட்டின் வலிமையும் வளமும் உயர்ந்தன.

**7. மக்கள் தொகைப் பெருக்கம் :** 15,16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் தொகை வேகமாகக் கூடியது.

இதனால் பல மாற்றங்கள் ஏற்பட்டன. நகரங்களில் குடியேறியவர்கள் தொழில் வளர்ச்சிக்குத் துணைசெய்தனர். போக்குவரத்து, வாணிபத்தில் ஈடுபடவும் குடியேற்ற நாடுகளுக்குச் செல்லவும் தேவையான ஆட்கள் கிடைத்தனர் மக்கள் தொகைப் பெருக்கம் பொருட்களுக்கான தேவையைக் கூட்டியது. இது மேலும் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடையத் துணை செய்தது.

**8. வணிகர்களின் செல்வாக்கு** : வாணிப வளர்ச்சி வாணிப முதலாளிகள் என்ற புதிய இனத்தைத் தோற்றுவித்தது இவர்கள் செல்வத்தைத் தேடிக்குவித்தனர். வாணிப வளர்ச்சி தொழில் பெருக்கத்திற்குத் துணைசெய்தது. தொழில் முதலாளிகளும் செல்வாக் குப்பெற்று விளங்கினர். இவர்கள் மன்னர்களுக்கு கடன் கொடுத்து அவர்களது ஆதரவைப்பெற்று, அரசியலில் செல்வாக்குடன் திகழ்ந்தனர், ஆதலால் இவர்களது வாணிபக்கொள்கையும் அரசின் ஆதர வுடன் வளர்ந்தது.

## II. வணிக வாதத்தின் மையக்கோட்பாடுகள்

வாணிப வாதம் ஒரு நடைமுறைக் கருத்தாக வலியுறுத்தப் பெற்றது. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையில் பின்பற்றி யதாலும், இவைதான் வாணிப வாதத்தின் தலையாய கோட்பாடுகள் என்று திட்டவட்டமாகக் கூற முடிவதில்லை. ஆதலால்தான், "முழு மையான வணிகவாத இயலார் இருந்ததே இல்லை," என்று கூறு கின்றனர். வணிக வாதத்தினர் தங்களது நாடுகள் வலிமை பெற்று; திகழ செல்வத்தைக் குவிக்கவேண்டுமென்று கருதினர். செல்வம் பொன்னாகவும், வெள்ளியாகவும் இருக்குமென்று கருதியதால், ஒன்று சுரங்கங்களின் மூலம்பெற வேண்டும்; இரண்டு, வாணிபத்தின் மூலம் அவற்றைச் சேர்க்கவேண்டும் என்று கருதினர். இதற்கு பொன் வெள்ளி ஏற்றுமதியை உச்சநிலைப்படுத்தவும் இறக்குமதியை குறைக்கவும் முயலவேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

வணிக வாதத்தினரின் கொள்கைகளாகக் கீழ்க்கண்டவற்றை கூறலாம்:-

1. நாட்டின் நன்மைக்குத்தான் முதலிடம் தரவேண்டும்.

2. விலையுயர்ந்த உலோகங்களான தங்கம்,வெள்ளியின் இருப்பைக் கூட்டும் வகையில் நாட்டின் கொள்கைகள் இருக்கவேண்டும்

3. ஏற்றுமதிகளைக் கூட்டுவதும், இறக்குமதிகளைக் குறைப்பதும் நோக்கமாக இருக்கும்.

வணிக வாதத்தினரின் தலையாய கருத்துக்களைத் தொகுத்துக் கூறலாம்.

**(i) அரசின் பங்கு (Role of the State):** வணிக வாதிகள் அரசை மிகவும் ஆற்றல் மிக்கதாகக் கருதினார்கள். அவர்கள் கருத்துப்படி மக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, ஒழுங்கு படுத்த அரசுக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. தேசிய ஒருமைப் பாட்டை வலியுறுத்தியதால், நாட்டின் இயற்கை வளங்களையும், பொருள் வளத்தையும் அரசு தன் விருப்பம்போல் பயன்படுத்தலாமென்று எண்ணினர். போரைத்தவிர்க்க முடியாது என்று நம்பியதால், போரில் வெற்றி பெறவலுவான அரசு தேவை என்று நம்பினர். தனி மனிதர்களின் நலனைப் பேணவும் ஆற்றல் மிக்க அரசால் மட்டுமே முடியும் என்பதால், எல்லா வகையிலும் அரசை வலுப்படத்தக் கூடிய கருத்துக்களை வணிகவாதிகள் கூறினர். நாட்டின் பொருளாதார நட வடிக்கைகளில் அரசு தலையிடுவது தேவையென்று கருதினர். வணிக வாதிகளின் காலத்தில் இங்கிலாந்தில் அரசு பொருளாதார நடவடிக் கைகளை மிகவும் அதிகமாகவே நெறிப்படுத்தியது. ஆதலால்தான், சிறந்த பொருளாதார வரலாற்று ஆசிரியரான லிப்சன் ( E.Lipson), வணிக வாதிகளின் காலத்தில் இங்கிலாந்து தனது முதல் "திட்ட மிட்ட பொருளாதாரத்தை" (Planned Economy) பரிசோதனை செய்து பார்த்ததெனக் கூறுகின்றார்.உண்மையில், அரசின் எல்லாப் பொருளா தாரத்தலையீட்டு நடவடிக்கைகளையும் வணிக வாதிகள் அப்படியே ஏற்றுக் கொண்டார்களென்று கூறமுடியாது எடுத்துக்காட்டாக, நாட்டின் எல்லைக்ககுள் இருந்த செயற்கைத்தடைகளை விலக்கி, சுதந்திர வாணிபம் நடைபெற முயன்றதைக் கூறலாம். ஆனால், அரசுக்கும், சமுதாயத்திலிருக்கும் பல்வேறு குழுக்களுக்கும் இடை யில் மோதல் ஏற்பட்டால், அரசே எதனையும் தீர்மானிக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டுமென்று கருதினர்.

அரசு ஏற்றுமதியைக் கூட்டவும் இறக்குமதியைக் குறைக்கவும் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தது. அதிகமாக இறக்குமதி வரி களை விதித்து இறக்குமதிசெய்வதைக் குறைத்தது. அதே நேரத்தில், ஊக்கத் தொகை வழங்கியும், வரிச்சலுகைகள் அளித்தும் ஏற்றுமதிக்கு ஆக்கமளித்தது. எடுத்துக்காட்டாக இங்கிலாந்தின் நடவடிக்கைகளைக் கூறலாம். உற்பத்தியைப் பெருக்க நிறுவனங்களுக்கு முற்றுரிமை அளித்தும், புதிய தொழில்களைத் தொடங்க ஆவனசெய்தும், கப்பல் போக்குவரத்துச் சட்டங்களின் மூலம் வெளிநாட்டு வாணிபம் பெருகவும் அரசு முயன்றது. அதே நேரத்தில், கூலிகளையும் விலை

களையும் நிர்ணயித்துக் கட்டுப்படுத்தியது. அலெக்சாண்டர் கிரே (Alexander Gray) வணிக வாதியினரின் அரசு பற்றிய கருத்தைப்பற்றி, "வணிக வாதிகள் அவர்களுடைய திட்டங்களில் எல்லாம், அரசை பெருந்தன்மையுள்ள தந்தையைப் போன்ற அரசாகவே கருதினர். அரசின் தொடர்ச்சியான நடவடிக்கை பற்றியதே வணிகவியல் தத்துவம். அதனுடைய நடவடிக்கை பொது நலனைப் பெருக்கும் நோக்கோடு அமையுமானால் அரசு செய்யமுடியாது என்பதோ செய்யக் கூடாது என்பதோ ஒன்றும் இல்லை," என்று அழகாக் கூறுகின்றார்.

**(ii) பணமும் பொன்னும் வெள்ளியும்** :அரசின் வலிமைக்குப் பணம் இன்றியமையாதது என்று கருதியதால் பணத்திற்கு முக்கியத்தவம் கொடுத்தனர். விலையுயர்ந்த உலோகங்களான பொன்னையும் வெள்ளியையுமே செல்வத்தின் முதன்மையான வகைகளாகக் கருதினர். இந்நோக்கில் தான் பொன்னையும் வெள்ளியையும் குவிக்க ஒரு கருவியாக வாணிபத்தைக் கையாண்டனர். கொலம்பஸ், "தங்கம் ஓர் அற்புதமான பொருள். தங்கத்தை வைத்திருப்பவர் விரும்பியதை எல்லாம் பெறலாம். தங்கத்தின் மூலம் ஆன்மாவை மோட்சத்தில் சேர்ந்துவிடலாம்", என்று கூறினார். வில்லியம் பெட்டி **(Willam Petty)** என்பவர், "வாணிபத்தின் மிகப்பெரிய, இறுதியான விளைவு செல்வத்தைச் சேர்ப்பது. அல்லது குறிப்பாக, பிறபொருட்களைப்போல அழியாத, கெடுக்கமுடியாத, எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் செல்வமாகக் கருதுகின்ற வெள்ளி, தங்கம் அணிகலன்கள் ஆகியவற்றை மிகுதியாகக் குவிப்பதாகும்", என்று கூறியது குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சு நாட்டு வணிக வாதியான மான்ஷிடிரடியர் **(Montchretier)**, "தங்கத்தாலும் வெள்ளியாலும் தான் நாம் வாழ்கின்றோமேயன்றி, மூலப் பொருள்களில் நாம் செய்யும் வாணிபத்தால் அல்ல," என்று கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

வணிக வாதிகள் பொன்னுக்கும் வெள்ளிக்கும் பணத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்ததற்கான காரணங்களைத் தொகுத்து கூறலாம்.

1. அந்தக்காலத்தில் எல்லோரும் ஏற்றுக் கொள்கின் பண்டப்பணமாக பொன்னும் வெள்ளியுமே இருந்தன. வாணி வளர்ச்சியில் பணத்தின் பங்கும் பணிகளும் மிகுதியாயின.

2. அரசின் ஆற்றலைப் பெருக்க வரிவிதிப்பு எற்ற கரு யாயிற்று. வரி விதிப்பிற்கும் வசூலுக்கும் ஏற்றதாகப் பணம் இருந் தால், பணத்தின் அரசியல் முக்கியத்துவம் கூடியது.

3. பணத்தின் மூலம் அரசன் எண்ணியதைச் செய்ய முடிந்த

**(2) வட்டி** :வட்டி வாங்குவது பற்றி வணிக வாதிகளிடம் இரு வகையான கருத்துக்கள் இருந்தன. ஒரு பிரிவினர் வட்டி வாங்குவதை ஆதரித்தனர்; மற்றவர்கள் எதிர்த்தனர். தாமஸ் மன் [Thomas Mun] வட்டி வாங்குவதை ஆதரித்த குழுவின் தலைவராகத் திகழ்ந்தார். இவர்களின் முதலீட்டுக்குப் பணம் பயன்படுவதால் வட்டி வாங்குவதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் தேவநந் [Devanant] போன்றவர்கள், வட்டி உழைக்கமல் வருகின்ற வருவாய் என்பதால், வட்டி வாங்குவது கூடா தென்றனர். இதனைப் பெரும்பாலான வணிக வியலார் ஏற்றுக் கொண்டனர்.

**(3) உற்பத்தி**: வணிகவியலாளர்கள் உற்பத்தியைப் பற்றி மிகவும் பழமையான கருத்துக்களையே கொண்டிருந்தனர், மூலவளங் களோடு மனித உழைப்பைப் பயன்படுத்துவதால் உற்பத்தி கிடைக்கு மென்று கருதியதால், மிகுதியாக மனித உழைப்பையும் வளங் களையும் பயன்படுத்த வேண்டுமென்று கூறினர். ஓரிரு வணிக வாதிகள் தான் வேலைப்பகுப்பின் மூலம் உற்பத்தியைக் கூட்டலா மென்ற கருத்தை வெளியிட்டனர். பெரும்பாலானவர்கள் உழைப்பை மிகுதிப்படுத்தி உற்பத்தையைப் பெருக்குவதையே வலியுறுத்தினர். குறைவாகக் கூலி கொடுத்தால் தான் மிகுதியாக உழைப்பார்கள் என்று நம்பினர். வேளாண்மையை விட பொருள் உற்பத்தி செய்யும் தொழில்களே வெளிநாட்டு வாணிபத்திற்குத் துணைசெய்வதால், அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். உழைப்பை, "உற்பத்தி யாற்றலுள்ள உழைப்பு" என்றும், "உற்பத்தியாற்றலற்ற உழைப்பு" என்றும் பகுத்தனர். உழவர்கள், தொழில் வினைஞர்கள், வணிகர்கள் ஆகியோரின் உழைப்பை உற்பத்தியற்றவையாகவும் கருதினர்.

**4. வரிவிதிப்பு [Taxation]:** வணிக வாதிகள் தெளிவான அறிவியல் முறை சார்ந்த வரி விதிப்புக் கருத்துக்களைக் கொண்டி ருந்தனர். அவர்கள் காலத்தோடு ஒப்பிட்டால், அவை மிகவும் முன் னேற்றமானவைகளாகும். பின்னால் ஆடம்ஸ்மித்தும் , தற்காலத்தில் கால்டரும் [Kaldor] உருவாக்கிய பலவரிக்கொள்கைகளுக்கு மூலத்தை வணிக வியலாரின் கருத்துக்களில் காணலாம். பொதுவாக அவர்கள், "ஒவ்வொருவரும் அரசிடமிருந்து பெறுகின்ற நன்மைகளை ஒட்டிவரிசெலுத்த வேண்டும்", என்ற அடிப்படையில் பன்முக வரிகளை விதிக்கும் முறையை [Multiple Tax System] ஆதாரித் தனர். நன்மைகளை அளவிடுவதில் கருத்து வேறுபாடு இருந்தது. சில வணிக வாதிகள், பெறுகின்ற பாதுகாப்பின் அடிப்படையிலும், சிலர் வைத்திருக்கின்ற சொத்துக்களின் அளவைச் சார்ந்தும் வரி செலுத்த

மா என்பதை ஆராய வேண்டும்; 2) பொருட்களைப் பதனிடும் தாழில்களை நிறுவவேண்டும்; 3) வேலை வாய்ப்பு உள்ளவரை க்கட் தொகையைப் பெருக்க வேண்டும்; 4) பொன், வெள்ளி ஏற்று தியைத் தடை செய்யவேண்டும்; 5) உள்நாட்டுப் பொருட்களை ட்டும் பயன்படுத்தவேண்டும்; 6) இறக்குமதிப் பொருட்களுக்காகத் ங்கம், வெள்ளியைக்-கொடுக்கக்கூடாது; 7) இறக்குமதி செய்வது லப் பொருட்களாகவே இருப்பது சிறந்தது; 8) வினைமுடிந்த பாருட்களை ஏற்றுமதி செய்து பொன்னையும், வெள்ளியையும் சமிக்க வேண்டும்; 9) உள்நாட்டில் கிடைக்கும் தரம் குறைந்த பாருட்களைப் பயன்படுத்தவேண்டும்; என்னும் கருத்துக்கள் றிப்பிடத்தக்கவை.

**(iii) மான்கிரடின் (Montchretien 1576-1621):** பிரெஞ்சு ாட்டு வணிக வாதியான இவர் இரும்புப் பொருட்களை உற்பத்தி சய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்த ஒரு கவிஞர். 1615-ல் வளியான 'அரசியல் பொருளாதாரம் பற்றியநூல்' ( A Tract on olitical Economy) மூலம் புகழ் பெற்றார். மன்னர் மீது பற்றுக் காண்ட இவர் தேசியக் கருத்தை வலியுறுத்தினார். வேளாண்மை யச் செல்வத்தின் மூலமாகக் கருதினார். எல்லோரும் தேனீக்களைப் பால கடினமாக உழைத்துச் செல்வத்தைப் பெருக்க வேண்டுமென்ற ருத்தை வலியுறுத்தினார். சோம்பலின் தீமையை உணர்த்தினார்.

**(iv) அந்தோனியோ செர்ரா [Antonio Serra 1580-650]:** இத்தாலி நாட்டைச் சேர்ந்த வணிகவாதியான அந்தோனியா சர்ரா, "பொன் வெள்ளிச் சுரங்கங்கள் இல்லாத அரசுகளின் பொன் னயும் வெள்ளியையும் திரட்டுவதற்குரிய காரணங்கள் பற்றிய ட்டுரை" என்னும் நூலின் மூலம் சிறப்புப் பெற்றார். அவர் ராளமாகப் பொன்னும் வெள்ளியும் இருப்பதற்கு, 1) தொழிலின் அளவு; 2) மக்கள் தொகையின் தரம்; 3) விரிவான வாணிப நடவடிக் கைகள்; 4) அரசின் நெறிப்படுத்துதல் ஆகிய காரணிகளைக் கூறு ன்றார். இடையறா உழைப்பின் மூலம், தொழில் உற்பத்தியைப் பருக்கி, ஏற்றுமதி செய்து பொன்னையும் வெள்ளியையும் குவிக்க வண்டும் என்கிறார்.

## (IV) வணிக வாதத்தின் நடைமுறை (Mercantalism)

இங்கிலாந்திலும் , ஐரோப்பாவிலும் மூன்று நூற்றாண்டுகள் வணிக வாதம் செல்வாக்குப் பெற்றுச் செயல்பட்டது. இதுஓர் 'அதிகாரக்

**5) வரியைத் திரும்பித்தருதல்** [Drew Back]: இறக்குமதி வரி செலுத்தி வெளிநாடுகளிலிருந்து பெற்ற பொருட்களை மறுபடி ஏற்றுமதி செய்வதால் வாங்கிய இறக்குமதி வரிகளைத் திருப்பியளித்தனர். இதனால் உள்நாட்டில் தொழில் வளர்ந்தது.

**நாடுகளில் நடைமுறை:** இங்கிலாந்தில் நடைமுறைப் படுத்திய தானியச் சட்டங்களும் [ The Corn Laws ], கப்பல் போக்கு வரத்து சட்டங்களும் குறிப்பிடத்தக்கவைகள். பிரான்சில் 'கால் பெர்டிசம்' என்றபெயரால் பின்பற்றப் பெற்றவணிகவாதம் தொழில் களில் பலவகைக் கட்டுபாடுகளைக் கொண்டுவந்தது. ஜெர்மனியில் தொழில்களை வளர்க்க வணிகவாதம் பயன்பட்டது.

## V. வணிக வாதம் - ஒரு மதிப்பீடு

வணிக வாதத்தை டாக்டர் நியுமன் [Newman] காலத்தேவைக் கேற்ப உருவான கருத்தாகக் கருதுகின்றார். வணிக வாதக் கருத்துக் களைச் சிலர் ஒட்டுமொத்தமாக 'அறிவற்றவை' என்று ஒதுக்க முயன்றனர். ஆனால் வேறு சில பொருளியலறிஞர்கள் அவற்றின் சிறப்புக்களையும் சுட்டிக்காட்டுகின்றனர். ஆதலால் வணிக வாதத்தின் நிறைகளையும் குறைகளையும் சுட்டிக்காட்டலாம்.

**பொருளாதாரச் சிந்தனைக்கு வணிகவாதிகள் அளிந்தவை**: பொருளியல் சிந்தனையை வலுப்படுத்த வணிக வாதியினர் சிலவற்றை வழங்கியுள்ளனர். அவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

**1. செல்வம் பற்றிய கருத்து:** போர்களை நடத்தவும் பொருளாதார வளர்ச்சி பெறவும் செல்வத்தைத் திரட்ட வேண்டு மென்ற வணிகவியலாரின் கருத்துக் குறிப்பிடத்தக்கது. கீன்ஸ் இச் கருத் தால் மிகவும் கவரப்பெற்றார். வாணிபத்தைப் பெருக்கவும் வட்டி வீதத்தைக் குறைக்கவும் நிறையப்பணம் வேண்டுமென்ற வணிக வியலாரின் கருத்தை கீன்ஸ் ஏற்றுக்கொண்டார். விக்செல்லின் [Wicksell] வட்டிக் கோட்பாட்டிற்கும் வணிகவியலாரின் கருத்து முன்னோடியாக அமைந்தது.

**2. வலுவான அரசு:** வணிகவியலாரின் வலுவான அர வேண்டுமேன்ற கருத்து இங்கிலாந்து, பிரான்சு, ஹாலந்து போன் வல்லரசுகள் தோன்றி வளரத்துணை செய்தன. இக்கருத்து நாட்டு பற்றை வளர்த்தது.

**3.பொருளாதாரக் கொள்கையை உருவாக்**

# 3. இயற்கை வாதம் [PHYSIOCRACY]

வணிக வாதத்திற்கு நேர் எதிர்வாதம் போல் தோன்றிய இயற்கை வாதத்தை பிரெஞ்சு நாட்டினரான டாக்டர் குவஸ்னேயும் [Quensnay] அவரது ஐந்து அருமைச்சீடர்களும் 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் உருவாக்கினர். 'பிசியோகரசி' [physiocracy] என்ற கிரேக்கச் சொல்லுக்கு 'இயற்கையின் விதி' [Rule of Nature] என்பது பொருள். குவஸ்னேயும், அவரது சீடர்களான முத்தமிரபோ [Elder Miabeau], கூர்னே (Cournot), துபான்ட் (Dupont), மெர்சியர் (Mercier), துர்கோ (Turgot) ஆகியோரும் எழுதியவை பெரும்பாலும் 1756 முதல் 1778 ஆண்டுகளுக்குள் வெளியாயின. இவர்களது கருத்துக்களால் பெரிதும் கவரப் பெற்ற ஆடம்ஸ்மித், இயற்கைவாதிகள் வேளாண்மைப் பொருளியலறிஞர்கள் என்று குறிப்பிடுகின்றார். குறுகிய காலமேயானாலும் இவர்கள் கொள்கை கொடி கட்டிப்பறந்தது. இவர்களைப் புதிய பொருளாதாரத்திற்கு 'அடிப்படை அமைத்தவர்கள்' என்று கருதலாம்.

## I. இயற்கை வாதம் தோன்றக் காரணங்கள்

இயற்கை வாதம் தோன்றிச் செல்வாக்குப் பெற்றதற்கான காலச் சூழ்நிலையையும் காரணங்களையும் விளக்கலாம்.

**1. அரசின் எதேச்ச அதிகாரப் போக்கு** :16,17 ஆம் நூற்றாண்டுகளில் பதினைந்தாம் லூயி, பதினாறாம் லூயி ஆட்சிக் காலத்தில் இம்மன்னர்களின் கண்மூடித்தனமான ஆடம்பர மோகத்தாலும் எதேச்சதிகாரப் போக்காலும் பிரெஞ்சு நாட்டுப் பொருளாதாரம் சீர்குலைந்தது. இவர்கள் "நான் அரசன் மட்டுமல்ல; அரசும் நான்தான்", என்ற எண்ணத்தில் 'வைத்ததே சட்டம்' என்ற செயல் பட்டனர். அளவு கடந்த ஆடம்பரச் செலவுகளினால் கருவூலம் காலியானது. வரிகளின் மூலமும் கடன்களின் மூலமும் அரசுபணம் திரட்ட முடிந்தது. இதனால் ஏழை கிராம விவசாயிகளும், வணிகர் களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இக் காலத்தில் நடைபெற்ற போர்கள் அரசின் செலவைக் கூட்டி சூழ் நிலையை மேலும் மோசமாக்கின. அரசின் மீதும் ஆட்சியின் மீதும் நம்பிக்கை இழந் திருந்த மக்களுக்கு புதிய நம்பிக்கையளிக்கும் கோட்பாடாக இயற்கை வாதம் எழுந்தது.

**2. அளவுக்குதிகமான சட்டதிட்டக் கட்டுப்பாடுகள்:** வணிக வாதக் கொள்கையின் விளைவாக மக்களின் பொருளாதா நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பல சட்டங்கள்தோன்றின. வணிக வாதத்தைத் திறமையாய் செயல்படுத்திய அமைச்சர் கால்பர்ட்

[Colbert] தனது காலத்தில், தொழில், வாணிபத்தை நெறிப்படுத்த பத்தெட்டுச் சட்டங்கள் கொண்டு வந்தார். 1683இல் அவர் காலத்திற்குப் பின் கட்டுப்படுத்தும் சட்டங்களின் எண்ணிக்கை கூடியது. 1789-இல் பிரான்சில் மொத்தம் 230 கட்டுப்படுத்தும் சட்டங்கள் இருந்தன. எல்லா நடவடிக்கைகளையும் அரசு இரும்புக் கவசம் போன்ற சட்டங்களால் கட்டுப்படுத்தியது. மக்களை மூச்சு முட்டித் திணறச்செய்தது. அரசின் நிலையில் அரசின் தலையீடு கூடாதென்ற இயற்கை வாதிகளின் கருத்துக்குப் பெருமளவில் மக்களின் ஆதரவு கிடைத்தது.

**5. பெருஞ்சுமையான வரிகள்:** பிரான்சில் நேர்முக வரிகளின் எண்ணிக்கையும், சுமையும் பெருகியதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மதக்குருமார்களுக்கும் பெரும் நிலக் கிழார்களுக்கும், பிரபுக்களுக்கும் அவர்களது வேளாண்மை நிலத்திற்கு வரிசெலுத்தியவீட்டுவரியும் நிலவரியும் மட்டும் அவர்களின் வருவாயில் பாதிக்குமேல் வந்தது. குத்தகைப்பணமும் மிகுதியாக இருந்ததால் அவர்களுக்குக் கிடைத்த நிகர வருவாய்குறைவு. மக்கள் சொத்துவரி, சுங்கவரி, நுகர்வு வரிகள், சாலை, பாலங்களைப் பயன்படுத்த வரிகள் என்று பல்வேறு வரிகளைச் செலுத்தவேண்டி யிருந்தது. வரிவிதிப்பின் கொடுமைக்கு உப்பு வரியைக் கூறலாம். உப்புக்கு வரி விதித்து, ஏழு ராத்தல் உப்பு வாங்க வேண்டுமென்று சட்டம் செய்தனர். மேலும் வரிவசூலில் கொடுமையான முறைகளைப் பின்பற்றினர். வசூலித்த வரிப்பணத்தில் மூன்றில் ஒரு பங்கு தான் அரசின் கருவூலத்திற்குச் சென்றது. வரிவிதிப்பு முறையால் பெரிதும் அல்லறப்பட்ட மக்கள் இந்தத்துன்பத்திலிருந்து விடுதலை பெற விரும்பியதால் இயற்கை வாதத்தை ஆதரித்தனர்.

**4. ஒரு தலைப்போக்கான வணிக வாதக் கொள்கைகள்:** வணிகவாதம் வேளாண்மையைப் புறக்கணித்து தொழில், வாணிபத்திற்கு முன்னுரிமையளித்தது. ஆனால் நடைமுறையில் இக்கொள்கை பயனற்றதென மக்கள் கருதும் சூழ்நிலை உருவானது. இங்கிலாந்தில் வேளாண்மைப்புரட்சியின் விளைவாக பெரும் பண்ணைகள் வெற்றி கொள்ளத் தொடங்கின. மேலும் இயற்கை வாதியான குவெஸ்னே வேளாண்மையில் புதிய முறைகளைப் பின்பற்றி உற்பத்தியைப் பெருக்கலாமென்பதைச் செயல்படுத்திக் காட்டினர். இதனால் மக்கள், வணிக வாதத்தினர் வாணிபத்திற்கும், தொழிலுக்கும் தேவைக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்து விட்டதாகக் கருதினர். இது வணிக வாதம் வீழ்ச்சியுற வழி வகுத்தது.

**5. கருத்துப்புரட்சி** : வணிக வாதத்தின் கொள்கை களின் குறைகளை மக்கள் உணர்ந்திருந்தாலும் பதினான்காம் லூயி மன்னனின் இராணுவக் கொள்கையின் விளைவாக, கருத்துக்களைக் கூறும் சுதந்திரமற்று இருந்தனர். பின்னால் சமய, அரசியல் சிந்தனை அடிமைத்தனம் தகர்க்கப்பெற, மக்கள் மாற்றங்களை விரும்பிக் கருத்துக்களைக்கூறினர். தனிமனித சுதந்திரத்திற்கு வாய்ப்பளிக்கும் வகையில் சட்டங்களை எளிமைப்படுத்தவேண்டுமென்ற கருத்து வளர்ந்தது. இங்கிலாந்தில் ஏற்பட்ட சுதந்திரக்கருத்து வளர்ச்சி பிரான்சிலும் பரவியது. பல ஆங்கிலேயப் புத்தகங்களைப் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டனர். அறிவியல் வளர்ச்சி சிந்தனைப் புரட்சிக்கு வழி வகுத்தது. இவை ஒரு மாற்றத்திற்கான நிலைகளனை அமைத்துத் தந்தன

பிரான்சு நாட்டிலிருந்த சீர்கெட்ட - அரசியல், பொருளாதார சூழ்நிலைகளால், மக்கள், குறிப்பாக விவசாயிகள் வறுமையில் வாடினர். இந்திலையில் மக்களை, வாழ்விக்க வந்த கோட்பாடாக இயற்கைவாதம் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது

## II. தலைசிறந்த இயற்கை வாதிகள்

இயற்கை வாதிகள், வணிக வாதிகளைப் போல, பல நாடுகளில் வாழ்ந்தவர்கள் அல்ல, எல்லோரும் ஏறத்தாழ ஒரே காலத்தில் பிரான்சில் வாழ்ந்தவர்கள். இவர்கள் குவெஸ்னேயைக் குருவாகக் கொண்டு ஓரணியாய் நின்று கருத்துக்களைக் கூறிய அறிஞர்கள். இவர்களில் முக்கியமானவர்களைப் பற்றி மட்டும் சுருக்கமாக அறிந்து கொள்ளலாம்.

**(I) டாக்டர் பிரான்சு வாகுவஸ்னே (1694 - 1774)** (Francols Quesney): டாக்டர் குவஸ்னே 1694 ஆம் ஆண்டில் ஓர் எளிய வேளாண்மைக் குடும்பத்தில்பிறந்தார். தனது பதினேழாம் வயதுவரை குடும்பப் பண்ணையில் வாழ்ந்தார். தனே கற்று இருபத்தைந்தாம் வயதில் ரணச் சிகிச்சை டாக்டரானார். பதினைந்தாம் லூயியால் அரசு குடும்ப மருத்துவராக நியமிக்கப்பெற்றார். தன்னை எப்பொழுதும் கிராமவாசியாகவே கருதிய இவர் வேளாண்மையில் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

இவர் 'உழவர்கள்' 'தானியங்கள்' என்ற தலைப்பில் கலைக் களஞ்சியத்திலும் சில பத்திரிக்கைகளிலும் கட்டுரைகள் எழுதினார். இவர் எழுதிவெளியிட்ட 'பொருளாதாரப்பட்டியல்' [Economic Table] நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்தது. 1760ல் வெளிவந்த இவரது 'பொருளாதாரப் பொதுக்கொள்கைகள் ' என்னும் நூல் இயற்கை

சொத்துரிமை, பாதுகாப்பு, சுதந்திரம் ஆகியவை இயற் திகளின்படி சமுதாய ஒழுங்கு முறையாக இருக்கும் சமத்துவத் க்கியத்துவம் தரவில்லை. எல்லாப் பிரிவினரும் ஒருவரை ஒரு ர்ந்து வாழ்தல் இயற்கை முறையாகுமென நம்பினர். தன்ன யற்கையான பண்பென்றுகருதினர்.ஆதலால் தன்னல உந்துத க்கள் உழைத்து உற்பத்தியைப் பெருக்கச் சுதந்திரம் இருந்தால் ன்னேறும். இந்த அடிப்படையில்தான் எல்லா வகையான அர டைகளையும் எதிர்த்தனர். "**தலையிடாக் கொள்கை** aissez-Fair] இயற்கை விதிகளின்படி அமைந்ததாக எண்ணி ரசு மக்களின் வாழ்க்கை, சுதந்திரம், சொத்து ஆகியவற்றைப் க்கும் பணியை மட்டம் செய்ய வேண்டும். அதாவது, இய றைமையைப்பாதிக்காத வகையில் அரசின் பணிகள் கு ளவிலேயே இருக்கவேண்டம்.

திறனாய்வாளர்கள் "இயற்கைமுறைமைக்" கருத்து சே வர்ச்சியாக இருந்தாலும், தெளிவற்று இருப்பதால், அதன் றைப் பயன்பாடு குறைவென்று சுட்டிக்காட்டுகின்றனர்.

**(ii) நிகர உற்பத்தி [Net Product]:** தெய்வப் ருவள்ளுவர், "உழவுத்தொழில் உலகிற்கு அச்சாணி", என்று சு பால, இயற்கை வாதிகள் அவர்களது இயற்கைத்தத்துவ அடிப்படையில் வேளாண்மை எல்லாத் தொழில்களுக்கும் ாக இருப்பதாகக் கருதினர். வேளாண்மையில் மட்டும்தா டை நேல் விதைத்தால் 10 மூடை நேல் கிடைக்கின்றது. செ சலவிலிருந்து இடுமானச் செலவைக்கழித்துக் கிடைக்கும் பொருளை '**நிகர உற்பத்தி**' [Net Product] என்றனர். "நிகர யின் அளவை ஒட்டித்தான் நாட்டு மக்களின் வளம் அ ன்று டுபாண்ட் என்ற இயற்கைவாதி கூறுகின்றார்.

வேளாண்மையில் மட்டம் நிகர உற்பத்தி கிடைப் ாரணம், மனிதனோடு சேர்ந்து இயற்கையும் உற்பத்திப் ட டுபடுவதுதான். இயற்கைக்கு மட்டுமே நிகர உற்பத்தி ஆற்றல் உண்டு. பிற தொழில்களிலும், வாணிபத்திலும் நிகர கிடைப்பதில்லை. இந்தக் கருத்தின் அடிப்படையில், இயற் ள், உழவுத்தொழில் செய்பவர்களை மட்டுமே 'ஆக்க உ Productive Labour] உடையவர்களாகக் கருதினர். பிற ளிலும் வாணிபத்திலும் ஈடுபட்டிருப்பவர்கள் உழைப்ை இல்லா உழைப்பு' [Un -productive Labour] என்று கூறினர். ால் இவர்கள் மூலப்போருட்களின் உருவத்தை மாற்றுகின் விர இடுமானத்தின் அளவைக் கூட்டுவதில்லை. இக்கரு

மருத்துவர், வழக்கறிஞர், ஆசிரியர், எழுத்தர் போன்றவர்கள் எல்
ஆக்கமில்லா உழைப்பாளர்களே. "மக்களின் செல்வத்திற்கு ம
மின்றி, நாட்டின் செல்வத்திற்கும் உழவுத் தொழிலே மூலம்", என்
டாக்டர் குவஸ்னேயின் கருத்து.

திறனாய்வாளர்கள் 'பருப்பொருள்' உற்பத்தி செய்
உழைப்பு மட்டும் ஆக்க உழைப்பு என்றும், மற்ற பணிகளை
செய்யும் உழைப்பை ஆக்கமில்லா உழைப்பு என்றும் பகுத்த
குறை கூறுகின்றனர். மேலும் உழவுத்தொழிலில் மட்டுமின்றி
தொழில்களுக்கும் இயற்கையின் ஒத்துழைப்புத் தேவைப்
வதையும் சுட்டிக்காட்டுகின்றனர். இயற்கைவாதிகள் கைத்தொ
லையும், வாணிபத்தையும் ஆக்கமில்லா உழைப்பு என்று கருதின
அவற்றை முற்றிலும் செய்ய அவையும் தேவைப்படுகின்
ஆனால் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உழவுத்தொழில் இருக்கி
தென்று வாதிட்டனர். வணிகவாதிகள் உழவர்களைப்பயனற்றவ
என்று கருதியதன் எதிர்தாக்கமாக இயற்கை வாதிகள் இக்கருத்
உருவாக்கினர் எனக்கருதலாம்.

**(iii) செல்வ ஓட்டம் (Circulation of Wealth):** மு
முதலாக நாட்டின் வருவாய் எவ்வாறு சமுதாயத்தின் பல பிரிவுக
கிடையில் பகிரப்படுகின்றதென்பதை ஆராய்ந்தவர்கள் இய
வாதிகளே. இவர்களது அணுகுமுறைதான் இன்று நாட்டு வரு
பற்றிய ஆய்வாக வளர்ச்சி பெற்றுள்ளது. ஹார்வி [Harvey] என்
உடம்பில் ரத்த ஓட்டம் எப்படி நடைபெறுகின்றதென்பதை வி
ஒரு நூல் வெளியிட்டார். இக்கருத்தால் கவரப்பட்ட டா
குவஸ்னே, நாட்டின் செல்வ ஓட்டத்தை இக்கருத்தின் அடிப்படை
விளக்கி, அவரது புகழ் பெற்ற "பொருளாதாரப் பட்டியல்" என்
நூலை 1758இல் வெளியிட்டார். சமுதாயத்தில் செல்வ ஓட்டம் எ
நடைபெறுகின்ற தென்பதை விளக்க, சமுதாய மக்களைக் கீழ்க்க
மூன்று பிரிவுகளாகப் பகுக்கின்றார்.

**(1) ஆக்க உழைப்பாளிகள் [The Producti**
நிலத்தில் இயற்கையோடு இணைந்து பாடுபடுகின்ற உழவர்கள் ஆ
உழைப்பாளிகள். இவர்கள் உழவு செய்வதோடு சாகுபடிச் செ
களையும் ஏற்கின்றனர். நிலக்கிழார்களுக்கு குத்தகை செலு
கின்றனர்.

**(2) நிலக்கிழார்கள் [The Class of Proprieto**
நிலத் திற்கு சொந்தக்காரர்களும் அரச குடும்பத்தினரும் இப்பிரி
அடங்குவர்.

**(5) ஆக்கமில்லா உழைப்பாளிகள்** [The Sterile Class]: வேளாண்மை தவிர பிற தொழில்களைச் செய்வோர் அனைவரும் ஆக்கமில்லா உழைப்பாளிகளே. கைவினைஞர்கள், வணிகர்கள், வீட்டுப்பணியாட்கள், பிறபணிகளைச் செய்வோர் எல்லாம் நிகர உற்பத்தி செய்யாததால் ஆக்கமில்லா உழைப்பாளர்களாகக் கருதப் பெறுகின்றனர்.

ஆக்க உழைப்பளிகளான உழவர்களே எல்லா செல்வத்தையும் உற்பத்தி செய்கின்றனர். இந்தச் செல்வம் மூன்று வகுப்பினரிடமும் எப்படி கைமாறுகின்றது (வட்டமடிக்கின்றது) என்பதை டாக்டர் குவஸ்னே விளக்கிய முறையில் சுருக்கமாகக் கூறலாம். உழவர்கள் மொத்தம் ஐந்து மில்லியன் ரூபாய் மதிப்புள்ள பொருட் களை உற்பத்தி செய்வதாக வைத்துக் கொள்வோம். இதில் இரண்டு மில்லியன் ரூபாய் அவர்களுக்குத் தேவைக்கு வேண்டியுள்ளது. இது சுழற்சிக்கு வருவதில்லை. மீதியுள்ள மூன்று மில்லியன் மதிப்புள்ள பொருட் களைப் பகிர்ந்தளிக்கின்றனர். அவர்கள் ஒரு மில்லியனைத் தங்களது தேவைப் பொருட்களையும் பணிகளையும் பெற ஆக்க மில்லா உழைப்பாளிகளுக்குத் தருகின்றனர். இரண்டு மில்லியனை நிலக்கிழார்களுக்கு குத்தகையாகவும், அரசுக்கு வரியாகவும் செலுத்து வதாகக்கொள்வோம். நிலக்கிழார்கள் இரண்டு மில்லியனில் ஒரு மில்லி யனை உணவுப் பொருட்கள் வாங்கவே செலவிடுகின்றனர். இந்த வட்ட ஓட்டமுறையில் உழவர்களிடமிருந்து வெளியேறியபணம் உழவர்களுக்கே வந்துவிடுகின்றது. இதயத்திலிருந்து வெளியேறும் இரத்தம் எல்லா உறுப்புகளுக்கும் சென்றுவிட்டு, இறுதியில் இதயத் திற்கே வருவது போன்று செல்வ ஓட்டம் இருப்பதை டாக்டர் குவஸ்னேயின் பொருளதாரப் பட்டியல் காட்டுகின்றது. உழவர்கள் சமுதா யத்தின் இதயமாகத் திகழ்கின்றார்களென்பது இயற்கை வாதிகளின் முடிவு.

இயற்கை வாதிகள் சொத்துரிமைக்கு முக்கியத்தவம் கொடுத்து நிலக்கிழார்களை கட்டிக்காக்கும் வகையில் கருத்துக்கள் கூறியதையும் , மக்களை மூன்று பிரிவுகளாக மட்டும் பரித்து நாட்டின் செல்வ ஓட்டத்தை விளக்கியதையும் திறனாய்வாளர்கள் குறை கூறுகின்றனர். ஆனால் 'நாட்டு வருவாயை' இன்று கணக்கிடும் முறைக்கு இயற்கை வாதிகளின் ஆய்வு அணுகுமுறை முன்னோடியாக இருந்ததென்பதை அறியவேண்டும். மேலும் அவர்களது 'நிகர உற்பத்திக்' கருத்து மார்க்சின் 'எச்ச மதிப்புக்' கருத்துப்போன்று சிறப்புப்பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது.

## 1. ஆடம்ஸ்மித்தின் வாழ்க்கையும் படைப்புகளும்

ஆடம்ஸ்மித் 1723 இல் ஸ்காட்லாந்திலுள்ள கிர்க்கால்டி என்னும் ஊரில் பிறந்தார். சொந்த ஊரில் பள்ளிப் படிப்பைமுடித்த இவர் கிளாஸ்கோ, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களில் சேர்ந்து பயின்று பட்டம்பெற்றார். நூலகத்தில் கிடைத்த நூற்களை எல்லாம் படித்து அறிவைப் பெருக்கிக்கொண்டார். 1750-51ல் எடின் பர்கில் ஆங்கில இலக்கியம், அரசியல் பொருளாதாரம் பற்றி மூன்றுசொற் பொழிவுகள் நிகழ்த்தினார். 1757இல் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் தர்க்கவியல் பேராசிரியராக நியமிக்கப் பெற்றார். அதே ஆண்டில் ஒழுக்கவியல் தத்துவப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். 1764-65 ஆம் ஆண்டுகளில் பக்லோபிரபுவுக்கு வழிகாட்டியாக உலகச் சுற்றுப் பயணம் செய்தார். அப்பொழுது வால்டேர், குவஸ்னே போன்ற பேரறிஞர்களைக் கண்டு பேசும் வாய்ப்புப் பெற்றார். 1778இல் சுங்கவரி ஆணையாளராகப் பொறுப்பேற்றார். திருமணமாகாத இவர் ஆராய்ச்சியிலும் எழுத்திலும் தனது காலத்தைக் கழித்தார். தன் அன்புத்தாயோடு வளமான வாழ்க்கை நடத்திய ஆடம்ஸ்மித் 1790இல் மறைந்த பொழுது இறவாப் புகழ்பெற்றுத் திகழ்ந்தார்.

**படைப்புகள்:** தத்துவப் பேராசிரியராக இருந்த பொழுது இவர் செய்த சொற்பொழிவுகளின் சாரத்தை 1759இல் 'ஒழுக்க உணர்ச்சியின் கோட்பாடு' [Theory of Moral Sentiment] என்னும் நூலாக வெளியிட்டார். எளிய, இனிய நடை கொண்ட இந்நூலை அனைவரும் விரும்பிப் பயின்றனர்.

இவருக்குப் பொருளாதார உலகில் தனிப்பெரும் இடத்தைத் தேடித்தந்த "நாடுகளின் செல்வத்தின் இயல்பையும் காரணங் களையும் பற்றி ஒரு விசாரணை" [An Enquiry Into the Nature and Causes of the Wealth of Nations] என்னும் மிகப் பெரிய நூல் 1776இல் வெளிவந்தது. இந்நூல் இவரது வாழ்நாளிலேயே ஐந்து பதிப்புகள் வெளிவந்தது. பெருளியலின் மூலநூலெனக்கருதப் பெறும் இந்தநூல் இவருக்கு 'பொருளியலின் தந்தை' என்ற பட்டத்தைத் தேடித்தந்தது.

**ஆடம்ஸ்மித்தின் சிந்தனையை உருவாக்கிய காரணிகள் :** ஆடம்ஸ்மித் உலகப் புகழ்பெற, அவரது சிந்தனையை உருவாக்கிச் செழிக்கச் செய்ய சில காரணிகளும், சூழ்நிலைகளும், பெற்ற அரிய வாய்ப்புகளும் அமைந்தன. அவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

**(i) சிந்தனையாளர்கள் தொடர்பு:** ஆடம்ஸ்மித்திற்கு பல சிந்தனையாளர்களின் தொடர்பு கிடைத்தது. முதலாவதாக இவருக்குப் பேராசிரியராக இருந்த பிரான்சிஸ் ஹட்சிசன் இவரிடம் தொழில் சுதந்திரம்பற்றிய கருத்தை ஊன்றினார். இதுவே இவருடைய நூலில் தலையிடாக் கொள்கையாக உருவெடுத்தது. இரண்டாவதாக, பக்லோபிரபுவுடன் ஐரோப்பா முழுவதும் சுற்றுப்பயணம் செய்த பொழுது தலை சிறந்த இயற்கைவாதிகளான டாக்டர் குவஸ்னே, துபான்ட், துர்கோ போன்றவர்களைச் சந்தித்துப்பேசும் வாய்ப்பு கிடைத்தது. இதனால் இயற்கை வாதத்தின் வாரம் இவரது கருத்துக்களுக்கு உரமிட்டது, மூன்றாவதாக, இவரது சம காலச்சிந்தனையாளரான டேவிட் ஹியுமுடன் நெருங்கிப் பழகியது இவரது கருத்துக்களை விரிவடையச் செய்தது. நான்காவதாக, கிளாஸ்கோவிலும் எடின்பரோவிலும் இருந்த பல சங்கங்களில் உறுப்பினராயிருந்த ஆடம்ஸ்மித் வணிகர்களோடும் பிரபுக்களோடும் நெருங்கிப் பழகி பல நடைமுறைக் கருத்துக்களை அறிந்து கொண்டார். ஐந்தாவதாக, இங்கிலாந்தின் வணிக வாதத்தின் இறுதிக் காலத்தில், சுங்கவரிகட்டுப்பாடுகளை எதிர்த்து வணிப சுதந்திரம் வேண்டி நின்ற வில்லியம் பெட்டி, டட்லி நார்த். ஜோசையா சைல்ட், கான்டிலன் ஆகியோரின் கருத்துக்களை அறிந்து, ஆடம்ஸ்மித் தனது நூற்களில் பயன்படுத்தியுள்ளார்.

**(ii) பொருளாதாரக் காரணிகள்:** ஆடம்ஸ்மித் காலத்தில் ஏற்பட்ட வியத்தகு பொருளாதார மாற்றங்கள் அவரது சிந்தனையில் தடம் பதித்து, விளைவுகளை ஏற்படுத்தின. 1) வணிக வாதத்தின் விளைவாய் ஏற்பட்ட கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மக்களுக்கு எரிச்சலை மூட்டின. (2) பொருளாதார, அரசியல், அறிவியல் வளர்ச்சியின் அடிநாதமாக சுதந்திரவேட்கை இருந்தது. 3) புதிய இயந்திரங்களைக் கண்டுபிடிக்கத் தொழில் புரட்சி ஏற்பட்டது. இதனால் உழைப்பு இடம் பெயர்ந்தது. தனிமனித சுதந்திரம் கூடியது. 4) மூல தனப் பெருக்கம் தனியார் நிறுவனங்களைத் தோற்றுவித்தது. 5) வேளாண்மைப்புரட்சி ஏற்பட்டதால் பெரிய பண்ணைகள் ஏற்பட்டன.

**(iii) அரசியல் காரணிகள்** : அரசியல் மாற்றங்களும் ஆடம்ஸ்மித்தின் சிந்தனையைத் தொட்டன. 1) அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பெற்ற வெற்றி, விட்டுக் கொடுக்கும் அரசியல் அணுகுமுறையை உருவாக்கியது. 2) பிரான்சில் பின்னால் வரப் போகும் புரட்சிக்கான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. ''சுதந்திரம்; சமத்துவம், சகோதரத்துவம்'', ஆகிய முழக்கங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. 3) அக்காலத்தில் ஹாப்ஸ், லாக், ரூசே

வால்டேர் போன்ற பலர் மனித சுதந்திரம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

இவை அனைத்தின் செல்வாக்கும் ஆடம்ஸ்மித்தின் பொருளாதார சிந்தனையிலும் எழுத்திலும் வெளிப்பட்டன. பல்வேறு பொருளியல் கருத்துக்களையும் இணைத்தும் உருவம் கொடுத்தும் சிறப்பாக ஆடம்ஸ்மித் விளங்கினார். கிரே [Gray]. "ஆடம்ஸ்மித்ற்கு முன்பு பொருளாதார விவாதங்கள் நடைபெற்றன. ஆனால் பொருளியலை விவாதிக்க தொடங்கிய நிலையை அவரின் மூலமாகத் தான் எட்டிப்பிடித்தோம்," என்கின்றார்.

## II. நாடுகளின் செல்வம்[THE WEALTH OF NATIONS]

1776இல் வெளிவந்த ஆடம்ஸ்மித்தின், "நாடுகளின் செல்வத்தின் இயல்பையையும் காரணங்களையும் பற்றிய ஒரு விசாரணை" என்னும் நூலை, அலெக்சாண்டர் கிரே "எல்லாப் பொருளாதாரச் சிந்தனைக் கருத்துக்களுக்கும் கருவூலம்", என்று போற்றிப்புகழ்கின்றார். மெஹான் பிரபு [Lord Mahon] "நாடுகளின் செல்வம் பொருளாதாரத்தில் ஆதி நூல் மட்டுமல்ல, அந்தமும் அதுவே," என்கின்றார்.

**நூலின் உள்ளடக்கம்:** இந்நூல் ஐம்பெரும் பகுதிகளையும் 32 அத்தியாயங்களையும், 841 பக்கங்களையும் கொண்ட "சிந்தனைக் கடல்" என்று கொள்ளத்தக்க பெரிய நூல். இதன் முதல் பகுதி, உழைப்புத்தான் செல்வத்திற்கு அடிப்படை என்பதை விளக்கி, செல்வம் எப்படி வாரம், கூலி, வட்டி, ஆதாயம் ஆகியவைகளாகப் பகிர்ந்தளிக்கப்பெறுகின்றது என்பதைக் கூறுகின்றது. இரண்டாம் பகுதி, முதலின் இயல்பு, வளர்ச்சி, பயன்படும் வழிவகை ஆகியவற்றை ஆராய்கின்றது. முதல் இரண்டுபகுதிகளை 'பொருளாதாரத் தத்துவக் கருவூலமாகக்' கருதலாம். மூன்றாம்பகுதி ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. நான்காம் பகுதி, வணிக வாதத்தையும் இயற்கை வாதத்தையும் விரிவாக ஆராய்கின்றது. ஐந்தாம் பகுதி அரசின் நிதி இயலை அருமையாக எடுத்துரைக்கின்றது. இந்நூலில் ஆடம்ஸ்மித் கூறியுள்ள பொருளாதாரக் கருத்துக்களைத் தனித்தனியாக விளக்கலாம்.

## III. உழைப்பின் சிறப்பு [Importance of Labour]

ஆடம்ஸ்மித் மனித உழைப்பையே நாட்டின் செல்வத்தின் மூலமாகக் கருதுகின்றார். "நாடுகளின் செல்வம்" நூலின் தொடக்கத்திலேயே உழைப்பின் முக்கியத்தவத்தைப் புகழ்ந்துரைக்கின்றார். இக்கருத்து முந்திய கருத்துக்களிலிருந்து மாறுபட்டது என்பதைக்

நாளைக்கு ஒரு குண்டூசி செய்வதே கடினமாக இருக்கலாம். எப்படி முயன்றாலும் இருபதுக்குமேல் செய்ய முடியாது. ஆனால் வேலைப் பகுப்பு முறையைப் பின் பற்றினால் ஓராள் சரா சரியாக 4,800 குண்டூசிகள் செய்யமுடியும் ஆடம்ஸ்மித்தின் இந்த எடுத்துக்காட்டு இன்றும் உலகப்புகழ் பெற்ற சான்றாக கூறப்பட்டு வருகின்றது.

**நன்மைகள்:** வேலைப்பகுப்பின் நன்மைகளை ஆடம்ஸ் மித் சுட்டிக்காட்டுகின்றார். அவை:- (1)தொழிலாளியின் திறமையும், நுட்பமும், தேர்ச்சியும் கூடுகின்றன. (2) நேரத்தை மிச்சப்படுத்த முடி கின்றது. (3) உற்பத்தி பல மடங்கு கூடுகின்றது. (4) சிறப்புத் தேர்ச்சி யின் மூலமாக புதிய இயந்திரங்களைக் கண்டுபிடிக்க உந்துதல் கிடைக் கின்றது.

**குறைகள்:** வேலைப்பகுப்பின் தீமைகளையும் ஆடம்ஸ்மித் உணர்ந்தே இருந்தார். அவற்றையும் சுட்டிக்காட்டுகின்றார். (1) தொழி லாளர்கள் ஒன்று அல்லது இரண்டு பணிகளையே தொடர்ந்து செய்வ தால் மனச்சோர்வும், பணியில் பற்றின்மையும் ஏற்படலாம். (2) சிறப் புத்தேர்ச்சிபெற மனவளத்தையும் சமுதாயப் பண்புகளையும் இழக்க வேண்டியுள்ளது. (3) வேலைபகுப்பு உழைப்பு இடம்விட்டு இடம் செல்வதைத் தடுக்கலாம். (4) வேலைப்பகுப்பு முறையில் ஒரு பொரு ளை முழுமையாக உற்பத்திசெய்த மனநிறைவு கிடைப்பதில்லை.

**வரையறைகள்:** வேலைப்பகுப்பைப் பின்பற்றுவதிலுள்ள வரையறைகளையும் ஆடம்ஸ்மித் சுட்டிக்காட்டுகின்றார். (1) அங் காடியின் அளவை ஒட்டித்தான் வேலைப்பகுப்பை அமைத்துக் கொள்ள முடியும். அங்காடியின் அளவை (அ) போக்குவரத்து வசதிகள், (ஆ) விற்பனை (மாற்று) வசதிகள் ; (இ) மக்கள் தொகை; (ஈ) மூலதனப் பெருக்கம் ஆகியவை நிர்ணயிக்கின்றன. ஒரு பொரு ளுக்கு விரிவான அங்காடி நிடைத்தால் பெருமளவில் வேலைப் பகுப்பைப் பின் பற்றலாம். (2) வேலைப்பகுப்பு முதலீடு செய்யக் கிடைக்கின்ற மூலத் தனத்தின் அளவை ஒட்டியும் அமைகின்றது. ஒரு தொழில் விரிவடை கின்றபொழுது வேலைப் பகுப்பின் வாய்ப்புக்களும் கூடுகின்றன.

**மதிப்பீடு:** ஆடம்ஸ்மித் வேலைப்பகுப்புக் கருத்தை மற்றைய சிந்தனையாளர்களிடமிருந்து எடுத்துப் பயன்படுத்திய போதிலும் அதனைக்கையாண்ட முறையில் தனித்தன்மை உள்ளது. எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் வேலைப்பகுப்பு தொடக்கமாக அமைவதோடு, செல்வ உற்பத்திப்பெருக்கத்திற்கு இது எவ்வாறு துணைசெய்கின்ற தென்பதையும் விளக்கியுள்ளார்.

போல நல்லாட்சி இல்லாத அயர்லாந்து மக்கள்தொகைப் பெருக்கத்தால் நரகமாகக் காட்சியளித்தது. பல ஆண்டுகள் சரியாக விளைச்சல் இல்லாததால் மக்கள் உணவின்றித் தவித்தனர்.

3. **இங்கிலாந்தில் இரவலர் சட்டம்** : இரவலர் சட்டத்தின் குறைகளாலும், அவற்றைச் சரியாக நிர்வகிக்காததாலும் ஏழை, எளியவர்கள் பெருந்துன்பப்பட்டனர். இந்த நிலையைப் பற்றி மால்தஸ் ஆர்வங்கொண்டு ஆராய்ந்தார்.

4. **தொழில் புரட்சி**: இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாக நாட்டில் வேலையின்மை தோன்றியது. மக்கள் வறுமையால் வாடினர்; நோய்கள் பெருகின. மக்களின் துன்பம் அதற்கான காரண-காரியங்களை ஆராயத்தூண்டியது.

5. **முன்னோடிகள்** : மால்தசுக்கு முன்பே மக்கள் தொகை பற்றிய சிந்தனை இருந்தது. மான்டெஸ்க்யூ என்பவர் மக்கள் வாழ்க்கை வளத்திற்கும் பிள்ளைகள் பெறுவதற்கும் தொடர்பு இருப்பதைச் சுட்டிக்காட்டினார். வணிகவாதிகள் மக்கள் பெருக்கத்தை ஆதரித்தனர். ஆனால் இயற்கைவாதிகள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்காமல் மக்கள்தொகைப் பெருக்கம் ஏற்படுவதை விரும்பவில்லை. ராபர்ட் வாலஸ் மக்கள் தொகைப் பெருக்கத்தையும், அதற்கு ஏற்படும் தடைகளையும் விளக்கி ஒரு நூல் எழுதினார். இவரது கருத்துக்களை மறுத்து காட்வின் என்பவர் 'அரசியல் நீதி' என்னும் நூலை வெளியிட்டார். இதில் மக்களின் துயரத்திற்கு அரசே காரணமென்று நிலைநாட்ட முயன்றார். இவரது கருத்துக்களை மறுத்து, மக்கள் தொகைச் சிக்கலை விளக்கும் நோக்கிலேயே மால்தஸ் தனது நூலை எழுதி வெளியிட்டார்.

## II. மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாடு

மக்கள் தெகைப் பெருக்கம் பற்றி மால்தஸ் கூறிய கருத்துக்கள் 'மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாடு' [The Malthusian Theory of Population] என்னும் பெயரால் வழங்கப் பெறுகின்றது. மக்கள் தொகைக்கும் உணவு அளிப்புக்குமுள்ள தொடர்பை இந்தக் கோட்பாடு விளக்குகின்றது. அதாவது உணவு பெருக்கத்தை விடமக்கள் தொகைப் பெருக்கம் மிகுதியாக இருக்குமென்று கூறுகின்றது.

**எடுகோள்கள்:** மால்தசின் கோட்பாடு இரு எடுகோள்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. 1) மனித வாழ்வுக்கு உணவு இன்றியமையாத ஒன்றாகும். 2) ஆண், பெண்பாலுணர்வு தேவை

தடைகளாகும். 2) **தீச்செயல்கள்** : போர், கொலை, கருச்சிதைவு, சிசுக்கொலை போன்றமனிதனின் கெட்ட செயல்களால் மக்கள் தொகை குறைவதை இது குறிக்கின்றது. 3) **ஒழுக்கக் கட்டுப்பாடுகள்**: திருமணம் செய்யாமலிருத்தல், திருமணத்தைத்தள்ளிப் போடுதல், திருமணமான பின்பும் குழந்தை பெறாமலிருத்தல் ஆகியவை ஒழுக்கட்டுப்பாடுகளுக்குள் அடங்குகின்றன. இவை மூன்றில் துன்பத்தடைகள் தவிர்க்கப்படத்தக்கவை என்பதாலும், தீச்செயல்கள் வெறுக்கப்படத்தக்கவை என்பதாலும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளையே விரும்பத்தக்கவைகளாக மால்தஸ் கருதுகின்றார்.

**இருவகைப் பிரிவு**: மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடை செய்கின்ற மூவகைத் தடைகளை, இன்னொரு அடிப்படையில் தவிர்ப்புத்தடைகள், இயல்புத்தடைகள் என்று இரண்டாகப் பிரித்துக் கூறுகின்றார். (1) **தவிர்ப்புத்தடைகள்** [Preventive Checks]: திருமணத்தை ஒத்திபோடுதல், ஒழுக்கட்டுப்பாடுகள் ஆகிய மக்கள் பிறப்புவிகிதத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள் தவிர்ப்புத்தடைகளாகும். (2) **இயல்புத் தடைகள்** [Positive Checks]: இறப்புவிகிதத்தைக் கூட்டுகின்றபோர், பஞ்சம், பிணி போன்றவை இயல்புத்தடைகளாகும். இயல்புத்தடைகள் துன்பம் தருவனவாக இருப்பதால் தவிர்ப்புத் தடைகளே விரும்பத்தக்கவைகளாகும்.

**விளைவு:** மக்கள் தொகையை தவிர்ப்பு, இயல்புதடைகளின் மூலம் குறைக்காவிட்டால், மக்கள் தொகை மிகுதியாக உண்ண உணவின்றி மக்கள் பட்டினியாலும் துன்பத்தாலும் அல்லற்படுவார்கள் மால்தஸ் மனிதகுலத்தின் எதிர்காலம் இருள்மயமாக இருக்குமென்பதைப் போன்ற கண்ணோட்டத்தை உலகிற்கு வழங்குகின்றார்.

**திறனாய்வு:** மால்தசைப்போன்று கடுமையான கண்டனங்களுக்கு ஆளான வேறு எந்தப் பொருளியலறிஞரும் இல்லையெனக் கூறலாம். அவரைப் படிக்காமலேயே அவரது கருத்துக்களை மட்டும் மேற்போக்காக அறிந்து சாடுபவர்களும் உண்டு. அவரை திருமணத்தை வெறுப்பவர்; கொள்ளை நோய்களை வரவேற்றவர்; குழந்தைக் கொலையை ஆதரித்தவர்; இருள்மயக் கண்ணோட்டம் கொண்டவர் என்றெல்லாம் கூறுவோர் உண்டு. மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாடு பற்றிக் கூறும் குறைகளைத் தொகுத்துக் கூறலாம்.

**1. தவறான கருத்து** : மால்தஸ் 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை இரட்டிக்கும் என்று கூறுகின்றார். வட அமெரிக்க மாநிலங்களில் இப்படி மக்கள்தொகை கூடியபோதிலும் இதற்கு வரலாற்றுச்சான்றுகள் இல்லையெனத் திறனாய்வாளர்கள்

மதிப்பு இருக்கவேண்டுமானால், அதில் பயன்பாடு இருக்கவேண்டும். ஆனால் பயன்பாடு மாற்று மதிப்பின் அளவுகோல் அல்ல. பொருட்களின் அளிப்பு 1) அவற்றின் அருகிய தன்மை [Scarcity] 2) அதனைப் பெற ஆகின்ற உழைப்பின் அளவு ஆகிய இரண்டினையும் சார்ந்துள்ளது

**இருவகைப் பொருட்கள்:** ரிக்கார்டோ பொருட்களை இருவகைகளாகப் பிரிக்கின்றார். முதல்வகை, மறுபடியும் உற்பத்தி செய்யமுடியாத [Non-reproduceable] பொருட்கள், அரிய ஓவியங்கள், கலையழகு மிகுந்த சிலைகள், சிற்பங்கள் . பழங்கால பொற்காசுகள் ஆகியவை இவ்வகையைச் சார்ந்தன. இவற்றின் மதிப்பு, இவற்றின் அரும்பாட்டையும் தேவையையும் சார்ந்திருக்கின்றது. இவற்றின் மதிப்பைப் பற்றி ரிக்கார்டோ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை. இரண்டாம் வகைப் பொருட்கள், மறுபடி, மறுபடி உற்பத்தி செய்யக் கூடியவை. இவற்றின் அளிப்பை எந்த அளவிற்கும் பெருக்கலாம். உற்பத்தி பெருகக்கூடிய பொருட்களின் மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்பெறுகின்றது என்பதையே ரிக்கார்டோ ஆராய்கின்றார்.

**உழைப்புக்கோட்பாடு-விளக்கம்:** ஆடம்ஸ்மித் 'உழைப்புக்கோட்பாட்டை தொன்மைச் சமுதாயச் சூழ்நிலையில் விளக்கினார். ரிக்கார்டோ முதலாளித்துவ சமுதாய அமைப்பிற்கும் இது எப்படிப் பொருந்துமென்று விளக்குகின்றார். ஆதலால் இவரது கோட்பாட்டை 93 சதவிகித உழைப்புக் கோட்பாடு என்று கூறுவதுண்டு.

ரிக்கார்டோவின் மதிப்பு பற்றிய உழைப்புச் செலவுக் கோட்பாட்டில் [Labour Cost Theory of Value], உழைப்பு சில பணிகளைச் செய்கின்றது. 1) உழைப்புத்தான் மதிப்பின் அடிப்படை யாகவும், மூலமாகவும், சார்பு மதிப்புகளாகவும் இருக்கின்றது. 2) முழுமை, சார்புமதிப்புக்களில் மாற்றம் ஏற்பட இதுவே காரணமாக இருக்கின்றது. 3) அதுதான் மதிப்பின் அளவுக்கு நெருக்கமானதாக உள்ளது. 4) அது விலையை அற, சமுதாய, பொருளாதார அடிப்படையில் நியாயப்படுத்துவதாக உள்ளது. 5) அது பொருளாதார மதிப்பையும் தொழில்நுட்பத்தையும் தொடர்புபடுத்துகின்றது. ரிக்கார்டோ உழைப்பிலுள்ள வேறுபாடுகளினால், ஒரு தொழிலில் ஈடுபடுத்தும் உழைப்பை மற்றொரு தொழிலில் ஈடு படுத்துவதிலுள்ள உழைப்போடு ஒப்பிடுவதிலுள்ள சிக்கலை உணர்ந்தே இருந்தார். ஆனால் பல்வகை உழைப்பால் தோன்றும் வேறுபாடுகள் எல்லாம், நடைமுறையில், அங்காடியில் சரி செய்யப்பட்டுவிடும் என்று கருதுகின்றார்.

மால்தஸ், குறைந்து செல் விளைவு விதியை விளக்கியதும் ரிக்கார்டோவுக்கு அவரது வாரக்கோட்பாட்டை உருவாக்க உதவியது.

**கோட்பாடு விளக்கம்:** ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று தரம் குறைந்த நிலத்தை சாகுபடி செய்வது, அல்லது சாகுபடி அளவு விரிவடைவது. இரண்டு, குறைந்துசெல் விளைவு விதியும் செறிவுமுறைச் சாகுபடியும். ரிக்கார்டோ, "மண்ணின் மூல, அழிக்கமுடியாத வளங்களைப் பயன்படுத்துவதற்காக, நிலத்தின் உற்பத்தியிலிருந்து நிலக்கிழாருக்குச் செலுத்துகின்ற பகுதி வாரமாகும்," என்று விளக்குகின்றார்.

**எடுகோள்கள்:** ரிக்கார்டோவின் வாரக்கோட்பாடு சில எடுகோள்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. 1) வாரம் நிலத்திற்கு மட்டுமே உரியது. ஆதாவது, நிலத்திலிருக்கும் வளவேறுபாட்டாலும், நில அளிப்பு நெகிழ்வற்றிருப்பதாலும் வாரம் கிடைக்கின்றது. இது "வேறுபாட்டு எச்சம்". 2) நிலத்தின் மூலமாக, அழிக்க முடியாத, உள்ளார்ந்த ஆற்றல்கள் உள்ளன. 3) நிலத்தில் குறைந்துசெல் விளைவுவிதி செயல்படுகின்றது 4) நிறைவுப்போட்டி இருக்கின்றது.

**எடுத்துக்காட்டு:** ரிக்கார்டோ அவரது கோட்பாட்டை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்குகின்றார். ஒரு நாட்டில் முதலில் புதிதாகக் குடியேறுகின்ற மக்கள் நல்ல வளமான நிலத்தைச் சாகுபடி செய்வார்கள். முதல் தர நிலம் தேவையான அளவு கிடைக்கும் வரை வாரம் செலுத்தவேண்டாம். மேலும் மக்கள் அங்குவந்து குடியேறுகின்றபொழுது, மக்களுக்குத் தேவையானதை எல்லாம், குறைந்து செல் விளைவுவிதி செயல்படுவதால் வளமான நிலத்திலேயே பெறமுடியாது. அந்நிலையில் இரண்டாம் தர நிலத்தைச் சாகுபடி செய்வார்கள். இதனால், இரண்டாம் தர நிலச் சாகுபடி கட்டுப்படியாகுமளவிற்கு தானிய விலை உயரும். இதனால் முதல் தர நிலத்திற்கு வாரம் கிடைக்கும். மேலும் மக்கள் குடியேற, மூன்றாம்தர நிலமும் சாகுபடிக்கு வந்தால் முதல் இரண்டு வகை நிலங்களும் வாரம் பெறும். இதிலிருந்து, உயர்ந்த நிலத்திற்கும் இறுதிநிலை நிலத்திற்குமுள்ள வேறுபாட்டினாலும்; நிலம் அமைந்திருக்கும் சூழ் நிலையாலும் வாரம் கிடைக்கலாம் என்பதை ரிக்கார்டோ சுட்டிக் காட்டுகின்றார்.

**வாரமும் விலையும்:** ரிக்கார்டோ வாரத்திற்கும் விலைக்கும் உள்ள தொடர்பையும் விளக்குகின்றார். அவர் கருத்துப் படி, வாரம் விலையில் சேர்க்கப்படுவதில்லை. விலைதான் வாரத்தைத் தீர்மானிக்கிறது. "வாரம் அதிகமாக இருக்கின்றது; ஏனென்றால் விலை அதிகமாக இருக்கின்றது. இதுவாரம் அதிகமாக இருப்பதால் அல்ல", என்பதே அவர் கருத்து.

போன்ற முறைகளினாலும் தங்களது வருவாயைப் பெருக்க முயன்றனர். இந்தச் சமயச்சூழல் வணிக வாதக்கருத்து வளரத் துணை செய்தது.

**4. கலாச்சார மாற்றங்கள்:** 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் பெரிய கலை, இலக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. மத்திய காலக் கருத்துப்படி மக்கள் வறுமை நிலையில் வாழ்வதே உயர்வான வாழ்க்கை என்ற சமய நம்பிக்கை இருந்தது. ஆனால் பழங்காலக் கலை இலக்கியம், கிரேக்க – ரோமானிய நாகரிகம் ஆகியவற்றின் மறு மலர்ச்சியும், புதிய இலக்கியங்களும் மக்களின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தைப் பெரிதும் மாற்றின. மக்கள் வானுலக வாழ்வை விட மண்ணுலக வாழ்க்கையைப் பெரிதும் மதிக்கத் தொடங்கினர். இதனால் பணம் தேடி ஆடம்பரமாக வாழும் முயற்சியை மேற்கொண்டனர். பணம் மக்களிடம் தனியாட்சி செய்ய, வாணிப வாதம் மக்களின் வாழ்க்கை முறையாக மாறியது.

**5. அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி :** அறிவியல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவாகப் பல மாற்றங்கள் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக, மேரினரின் திசைக் காட்டும் கருவியைக் [Mariner's Compass] கண்டுபிடித்ததால் கடல் போக்குவரத்து வளர்ந்தது. இதனால் கடல் வாணிபம் பெருகியது. கடிகாரம், உருப்பெருக்கி, தொலைநோக்கி, காற்றழுத்தமானி போன்றவற்றைக் கண்டுபிடித்ததால் மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்தன. புதிய கண்டுபிடிப்புக்கள் வணிகவியலாரின் பொன்னைக்குவிக்கும் வாணிபவளர்ச்சிக்கு உற்ற துணையாக இருந்தன.

**6. புதிய நாடுகளின் கண்டுபிடிப்பு:** 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் துணிச்சல் மிக்கவர்கள் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். 1492 இல் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். ஸ்பானியர்கள் மெக்சிக்கோவையும், பெருவையும் கைப்பற்றி, அங்கிருந்த சுரங்கங்களில் எடுக்கப்பட்ட தங்கத்தையும், வெள்ளியையும் தங்களது நாடுகளுக்குக் கொண்டு வந்தனர். இதன் மூலம் ஸ்பெயின் நாட்டின் வலிமை ஓங்கியதால், வணிகவியலாரின் கருத்துக்கள் சிறந்தவை என்ற உறுதி ஏற்பட்டது. 1498 இல் வாஸ்கோடகாமா இந்தியாவிற்குப் புதிய வழியைக் கண்டுபிடித்ததால் போர்ச்சுக்கல் நாட்டின் வலிமையும் வளமும் உயர்ந்தன.

**7. மக்கள் தொகைப் பெருக்கம் :** 15,16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் தொகை வேகமாகக் கூடியது.